1987 ஏப்ரல் 1]

சட்டத்தின்படி, ''Scheduled Timber'' என்று வகை செய்யப் பட்டுள்ள தேக்கு, சில்வர் ஓக், சந்தனம் மற்றும் ஈட்டி ஆகிய மரங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக தண்டனையும் கடுமையாக்கப்பட்டுள்ளது. 1982–83 முதல் இயற்கைக் காடு களில் விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயதேவன்பட்டி ராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள.

176—(*வினா எண். 100)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, கட்டயதேவன்பட்டி கிராமத்தில் ஆதி திராவிடமக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இடித்துள்ளதுஅரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இடிந்தவீடுகளை பழுதுபார்த்தல் அல்லது புதிதாகக் கட்டும் பணியை மேற்கொள்ளுவதற்கான காமராசர் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு அரசின் ஆய்விலுள்ளது.

ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கு சிறபபுத் திட்டம்.

244 (*வினா எண். 7398)—திரு. ம. சின்னராசு: மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கு என்று சிறப்புத்திட்டம் எதுவும் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) இத்திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி எதுவும் கோரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மாநில அரசால்1976-77 முதல் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப் பிட்ட நிதி உதவி அளித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]